# DEPOSITION OF WITNESS
## IN THE COURT OF SUB COURT, USILAMPATTI.

| | |
|---|---|
| Miscellaneous case No: | : S.C. No.338/ 2018 |
| Preliminary Register | : |
| Sessions | : |
| Deposition of witness of | : P.W. 2 |
| Name | : பாஸ்கரன் |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 15.11.2024.

--------

எதிரி ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டுள்ளது.

**முதல் விசாரணை:**

நான் தற்போது காவல்துறையில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்றுள்ளேன். கடந்த 02.12.2006ம் தேதி செக்காணூரனி காவல் நிலையத்தில் தலைமை காவலராக இருந்தபோது மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள் வெடிப்பொருள் தடுப்பு சம்மந்தமாக காவல் ஆய்வாளர் குமாரவேலு, சார்பு ஆய்வாளர் ஜெயபால், தலைமை காவலர்கள் ஆகியோர்கள் குழுவாக நியமிக்கப்பட்டு அன்று மாலை செக்காணூரனி பவர் கிரிட் சொரிக்காம்பட்டி சந்திப்பில் வாகன தணிக்கையின் போது இவ்வழக்கின் சம்மந்தப்பட்ட எதிரியானவர் அவர் ஓட்டி வந்த டிவிஎஸ் எக்ஸல் சூப்பர் TN 58 L 2298 என்ற இருசக்கர வாகனத்தை சோதனை செய்த போது, அவர் வாகனத்தில் நைட்டட் மிக்சர் 70 மற்றும் டெட்டனேட்டர் 550 எம்எல் கொண்டது, கன் பவுடன் 200 கிராம், நைட்ரேட் உப்பு 10 கிலோ, வயர் 115

எம்என் கொண்டதை சோதனையில் கண்டுபிடிக்கப்பட்டது. அவரை ஆய்வாளர் விசாரித்தபோது தகுந்த முகாந்திரம் இல்லாததால் அந்த இடத்தில் வேறு சாட்சிகள் இல்லாததால் சார்பு ஆய்வாளர் ஜெயபால் என் முன்னிலையில் மாலை 17.00 மணிக்கு அத்தாட்சி தயார் செய்து மேற்படி சொத்துக்களை கைப்பற்றினார். அத்தாட்சியில் நானும், என் உடனிருந்த சார்பு ஆய்வாளரும் சாட்சியாக கையெழுத்து செய்தோம். அதன்பின் எதிரி மற்றும் சொத்துக்களுடன் செக்காணூரனி காவல் நிலையம் வந்து எதிரியை காவல் ஆய்வாளர் கைது செய்ய உதவியாக இருந்தேன். இதுசம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

மாவட்ட காவல் கண்காணிப்பாளிரிடமிருந்து மேற்படி குழுவில் இருப்பதற்கு எனக்கு எழுத்துபூர்வ உத்தரவு வந்ததா என்றால் வாய்மொழி உத்தரவு வந்தது. குழு நியமனம் செய்தவுடன் ஆய்வாளர் உடன் இருந்தேன். அன்றைய தினம் சுமார் 5, 6 ஊர்களுக்கு ரோந்திற்கு சென்றிருப்போம். எதிரியை பிடித்தபோது மாலை 5.00 மணி என்றால் சரிதான். நாங்கள் மூவரும் போலீஸ் ஜூப்பில் சென்றோம். மேற்படி பவர் கிரிட்டில் வாட்ஸ்மேன், செக்யூரிட்டி இருப்பார்கள் என்றால் நான் பார்க்கவில்லை. அத்தாட்சி தயார் செய்யும்போது பவர் கிரீட் இடத்தில் தான் சொத்துக்களை கைப்பற்றியதாக மகஜர், வரைபடம் தயார் செய்யவில்லை என்றால் சரிதான். அத்தாட்சி யார் தயார் செய்தார் என்றால் எனக்கு ஞாபகமில்லை. அத்தாட்சி தயார் செய்ய ஒரு மணி நேரம் ஆனது. பவர் கிரீட் இருப்பது சோழவந்தான் டூ செக்காணூரனி பிரதான சாலை என்றால் சரிதான். பக்கத்தில் சொரிக்காம்பட்டி ஊர் உள்ளது என்றால் சரிதான். ஒரு மணி நேரமாக எதிரியிடமிருந்து பொருட்களை கைப்பற்றிய நிலையில் புகைப்படம் எடுத்தீர்களா என்றால் ஞாபகமில்லை. புகைப்படம்

எடுத்தது ஞாபகமில்லை என்றும், அத்தாட்சி யார் தயார் செய்தார் என்று ஞாபகமில்லை என்றும் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி சொத்துக்களை மற்றும் எதிரியையும் மாலை 7.00 மணிக்கு நிலையம் கொண்டு வந்தோம். அங்கு யாராவது தனிநபர்களை அழைத்து எதிரியை கைது செய்தார்களா என்றால் ஞாபகமில்லை. நான் சொன்னது போன்று அன்றயை தினம் ஆய்வாளருடன் ரோந்து பணிக்கு செல்லவில்லை என்றும், அன்றைய தினம் செக்காணூரனி காவல் நிலையத்தில் பணியில் இருந்தேன் என்றும், எங்கள் துறையை சேர்ந்த ஆய்வாளர் அவர்கள் எதிரியின் மீது புகார் கொடுத்த வழக்கு பதிவு செய்தததால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ம.வி.இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல எதிரி/கள் முன்னிலையில் என்னால் தட்டச்சுருக்குச் சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்குப் படித்துக் காட்டப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2024.11.15 16:23:43 +0530

உதவி அமர்வு நீதிபதி,
உசிலம்பட்டி.